**தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்**

**முன்னிலை. திரு. P.சிவஞானம், எம்,ஏ., எம்.எல்,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2023ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**கோரிக்கை மனு எண். (C.P.) 178/2021**

**CNR No.TNKP 18-000340-2021**

K.வடிவேலு,
மே/பா. பொதுச்செயலாளர்,
ஊரக உள்ளாட்சி சுகாதார
பொது பணியாளர்கள் சங்கம்,
புதிய எண்.77, பழைய எண். 32
தாண்டவராய கிராமணி தெரு,
தண்டையார்பேட்டை,
சென்னை - 600 081. . . . மனுதாரர்

/எதிராக/

1. தலைவர்,
கிதிரிப்பேட்டை ஊராட்சி,
ஊத்துக்காடு போஸ்ட்,
வாலாஜாபாத் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 605.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்,
வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம்,
வாலாஜாபாத் அஞ்சல்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 605 . . . எதிர்மனுதாரர்கள்

இந்த கோரிக்கை மனு 10.08.2023 அன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு வந்தபோது மனுதாரரின் பிரதிநிதி திரு.என்.திருநாவுக்கரசு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பி சார்வு செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத

காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய சம்பள நிலுவைத்தொகை ரூ.3,65,102/- நிர்ணயித்து அதற்கு 10% வட்டியுடன் அளிக்க உத்திரவிட வேண்டுமென்று கோரி இக்கோரிக்கை மனுவினை தொழிற்தகராறு சட்டப்பிரிவு 33C(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை மனுவின் சுருக்கம்**

மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கீழ் Pump Operator / Over Head Tank Operator ஆக வேலை செய்து வந்தார். முதல் எதிர்மனுதாரர் 2வது எதிர்மனுதாரர் கீழ் பணிபுரிகின்றார். மனுதாரர் 33ஆண்டுகளாக மேற்படி வேலை செய்து வந்தார். அவருக்கு மாத சம்பளம் ரூ.4,240/- கொடுக்கப்பட்டு வந்தது. தமிழ்நாடு அரசாணை G.O.(2D)No.62 Labour and Employment Department dt.11.10.2017 அளித்த சம்பள திருத்த உத்திரவின்படி அடிப்படை சம்பளம் ரூ.8000/- ஆகும். பஞ்சப்படி ரூ.3,502/- ஆகும். மொத்த மாத சம்பளமாக ரூ11,502/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை 22.11.2017 தேதியில் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த உத்தரவின்படி எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு உயர்த்தப்பட்ட சம்பள நிலுவைத்தொகை வழங்கப்படவில்லை. அதன்படி மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.3,65,102/- நிலுவையில் உள்ளது. இது குறித்து விரிவான கணக்கு விவரம் இணைக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய சம்பள நிலுவைத்தொகை ரூ.3,65,102/- நிர்ணயித்து அதற்கு 10% வட்டியுடன் அளிக்க உத்தரவு செய்யவேண்டும்.

3. எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பி சார்வு செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4. **இவ்வழக்கில் தீர்க்கக்கூடிய பிரச்சனை யாதெனில்,**

1. மனுதாரர் கோரியவாறு கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பள பாக்கி தொகை எதிர்மனுதாரர்கள் கொடுக்கப்பட வேண்டுமா -?
2. இவ்வழக்கில் கோரும் கோரிக்கை பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா -?

**5. தீர்வு**

**பிரச்சனை 1 மற்றும் 2**

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனுதாரர் முதல் எதிர்மனுதாரர் கீழாக Pump Operator / Over Head Tank Operator ஆக பணி செய்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நீண்ட காலமாக பணி செய்து வந்துள்ளார். அவருக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூ.4,240/- மட்டுமே வழங்கப்பட்டு வந்ததாகவும் ஆனால் அரசாணை G.O(2D)No.62ன்படி 11.10.2017 தேதியில் அளித்த அரசாணையின்படி திருத்தப்பட்ட ஊதிய விகிதம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி உள்ளூர் கிராம பஞ்சாயத்தில் பணி புரியும் Semi - skilled category Grade -II ஆக உள்ள Tank Operator பணிக்கு மாத அடிப்படை சம்பளம் ரூ.8,000/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அது குறித்து அரசாணை நகல் ம.த.சா.ஆ.1 ஆக குறியீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பணி புரியும் தொழிலாளர்களின் அகவிலைப்படி விவரம் குறித்து தொழிலாளர் ஆணையர் வழங்கிய Statement நகல்கள் ம.த.சா.ஆ.2,3,4 மற்றும் 5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் குடிநீர் மோட்டார் இயக்குபவர்களுக்கு உரிய ஊதியத்தை தவறாமல் வழங்க வேண்டுமென்று ஊரக உள்ளாட்சி சுகாதார பணியாளர்களுக்கு வழங்கப்பட செயல்முறை உத்தரவு நகல் ம.த.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4.10.2018 தேதியில்

ஊரக உள்ளாட்சி சுகாதார பொது பணியாளர்கள் சங்கம் சார்பாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு அரசாணையில் குறிப்பிட்ட திருத்தப்பட்ட ஊதிய உயர்வு உத்தரவை அளிக்க வேண்டும் என்று கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அது ம.த.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அஞ்சலக ஒப்புகை அட்டை நகல் ம.த.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு மனுதாரர் அனுப்பிய கடித நகல் ம.த.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அஞ்சலக ஒப்புகை அட்டை நகல் ம.த.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி மன்றத்தின் தீர்மான நகல் ம.த.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் வங்கி கணக்கு பாஸ் புத்தக நகல் ம.த.சா.ஆ.12ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு மாதமும் மனுதாரருக்கு வழங்கப்பட்ட சம்பள விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. 16.05.2018 தேதியில் மாநகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கை நகல் ம.த.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசாணை G.O.(2D)No.62 ன்படி உழியர்களுக்கு உரிய ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. 13.06.2011 தேதியில் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதி பேராணை மனுவின் உத்தரவு நகல் ம.த.சா.ஆ.14 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரர் ம.த.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவரின் சாட்சியத்தின்படி அரசாணை G.O.(2D)No.62ன்படி மாத அடிப்படை சம்பளம் ரூ.8000/-ஆக நிர்ணயம் செய்யப்பட்டு அதனடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டிருக்க வேண்டுமென்று பலமுறை கோரிக்கை விடுத்தும் எதிர்மனுதாரர்கள் ஊதிய உயர்வுப்படி சம்பளத்தை வழங்கவில்லை என்பதால் குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின்படி சம்பளத்தை நிர்ணயித்து நிலுவைத்தொகை வழங்க மறுக்கபடுவதாகவும், இந்நிலையில் இந்த கோரிக்கை மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும் அதன்படி கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பள வித்தியாச தொகை வழங்க உத்தரவிட வேண்டுமென்று கோரியுள்ளார். எதிர்மனுதாரர் இந்த

வழக்கில் ஆஜராகவில்லை. கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பள வித்தியாசத்தொகை குறித்து எதிர்மனுதாரர்கள் ஆட்சேபனை செய்ய முன் வரவில்லை. இந்த கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பள வித்தியாச தொகை அரசாணை G.O.(2D)No.62ன்படி மனுதாரருக்கு ஊரக உள்ளாட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரும் குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்படி சம்பளத்தை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று தொழிற்சங்கம் மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அதன் பிறகும் உரிய சம்பளத்தை நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதால் மனுதாரர் கோரியவாறு மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பள வித்தியாச நிலுவை தொகையான ரூ.3,65,102/-யை எதிர்மனுதாரர்கள் வழங்க கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். அந்த வகையில் மனுவில் கோரியுள்ள சம்பள நிலுவைத்தொகை மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதாக இருப்பதால் இக்கோரிக்கை மனு அனுமதிக்கப்படுகிறது.

7. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பள வித்தியாசத் தொகையையான ரூ.3,65,102/-யை இன்றிலிருந்து 3 மாதத்திற்குள் அளிக்க வேண்டுமென்று உத்தரவு செய்யப்படுகிறது. செலவுத்தொகையில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2023ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

ம.த.சா.1 K.வடிவேலு ( மனுதாரர் )

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.த.சா.ஆ.1 | 11.10.2017 | தொழிலாளர் துறையால் வழங்கப்பட்ட அரசாணை எண்.62 நகல். |
| ம.த.சா.ஆ.2 | 16.03.2018 | தொழிலாளார் ஆணையர் அளித்த அகவிலைப்படி உயர்வு குறித்து Statement நகல். |
| ம.த.சா.ஆ.3 | 18.03.2019 | தொழிலாளார் ஆணையர் அளித்த அகவிலைப்படி உயர்வு குறித்து Statement நகல். |
| ம.த.சா.ஆ.4 | 17.03.2020 | தொழிலாளார் ஆணையர் அளித்த அகவிலைப்படி உயர்வு குறித்து Statement நகல். |
| ம.த.சா.ஆ.5 | 16.03.2021 | தொழிலாளார் ஆணையர் அளித்த அகவிலைப்படி உயர்வு குறித்து Statement நகல். |
| ம.த.சா.ஆ. 6 | 22.12.1992 | காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வெளியிடப்பட்ட உத்தரவு நகல். |
| ம.த.சா.ஆ.7 | 04.10.2018 | மாவட்ட ஆட்சியருக்கு ஊரக உள்ளாட்சி சுகாதார பொது பணியாளர்கள் சங்கம் வழங்கிய கடித நகல். |
| ம.த.சா.ஆ.8 | | அஞ்சல் ஒப்புகை அட்டை நகல். |
| ம.த.சா.ஆ.9 | 08.11.2021 | எதிர்மனுதாரருக்கு மனுதாரர் சம்பள உயர்வு கோரி அனுப்பிய கடித நகல். |
| ம.த.சா.ஆ.10 | | அஞ்சல் ஒப்புகை அட்டை நகல். |
| ம.த.சா.ஆ.11 | | ஊராட்சி மன்றத்தின் தீர்மான நகல். |
| ம.த.சா.ஆ.12 | | மனுதாரரின் வங்கி கணக்கு பாஸ் புத்தக நகல். |
| ம.த.சா.ஆ.13 | 16.05.2018 | சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் வழங்கிய சுற்றறிக்கை நகல். |

ம.த.சா.ஆ.14 13.06.2011 சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபேராணை வழக்கு உத்தரவின் நகல்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.</u>**

ஒம்/- P.சிவஞானம்,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.

// உண்மை நகல் //

P SIVAGNANAM

Presiding Officer,
Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2023.08.28 10:49:42 +0530

தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சீபுரம்.